## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் : SC.No. 31/2014
## வழக்கு சாட்சி PW–11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சபாபதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பொன்னுலிங்கம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | ஏரல் | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 6th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஏரல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2013 ம் வருடம் கடையநல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பு பார்த்து வந்தபோது, கடந்த 16.02.2013 ம் தேதி, காலை 05.30 மணிக்கு சொக்கம்பட்டி காவல் நிலைய குற்றஎண்.24/2013 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அன்றைய தினம் காலை 05.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கார்த்திக்ரகுநாத் மற்றும் தங்கத்துரை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடமான சுந்தரேசபுரம் கன்னிவிநாயகர்கோவில் பஸ்ஸ்டாப் சென்று பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.8** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9** ஆகும். பின்னர், சாட்சிகள் கார்த்திக்ரகுநாத், தங்கத்துரை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் அரசு மருத்துவமனை தென்காசி சென்று சிகிச்சையில் இருந்த சாட்சிகள் இசக்கிபாண்டியன், சுப்பையாபாண்டியன், திருமலைக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.02.2013 ம் தேதி சாட்சிகள் ரத்தினவேல்பாண்டியன், செல்லத்துரை, பழனியம்மாள், கருப்பசாமித்தேவர், காளியம்மாள், உதவி ஆய்வாளர் சரவணக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

08.03.2013 ம் தேதி, மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி வழக்கின் விசாரணையை துணைக்காவல்கண்காணிப்பாளர் அவர்களுக்கு மாற்றம் செய்ததினால், நான் வழக்குகோப்பை துணைக்காவல்கண்காணிப்பாளர் வானுமாமலை என்பவரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

எதிரி மருதையாபாண்டியன் வழக்கின் சாட்சிகள் இசக்கிபாண்டி மற்றும் வகையாட்கள் மீது புகார் கொடுத்து, அது சொக்கம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.25/2013, சட்டப்பிரிவுகள் 147, 148, 341, 342, 294(பி), 324, 326, 307 இதச உ/இ 149 இதச மற்றும் Sec 3 of TNPPDL Act என்று வழக்கு பதிவு செய்யப்பட்டு அது SC.443/2016 என நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். குற்ற எண்.24/2013 மற்றும் குற்ற எண்.25/2013 வழக்குகள் ஒன்றுக்கொன்று எதிர் வழக்குகள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல்தகவல்அறிக்கையின் சான்றிட்ட நகல் தான் குற்ற எண்.25/2013–க்கானது என்றால் சரிதான். அது **எ.சா.ஆ.1** ஆகும். நான் அந்த வழக்கில் தயாரித்த பார்வை மகஜர், மாதரி வரைபடத்தின் சான்றிட்ட நகல் – **எ.சா.ஆ.2, எ.சா.ஆ.3** ஆகும்.

இரண்டு வழக்குகளையும் முதலில் நான் புலன் விசாரணை செய்தேன் என்றால் சரிதான்.

இரண்டு வழக்குகளிலும் காயம்பட்டவர்களை முதலில் கடையநல்லூர் அரசு மருத்துவமனை மருத்துவர்.சண்முகையா என்பவர் சிகிச்சை அளித்துள்ளார் என்றால் சரிதான். இரண்டு தரப்பினர்களும் மருத்துவரிடம் தாங்கள் 15.02.2013 அன்று இரவு 09.00 மணிக்கு தாக்கப்பட்டதாக கூறியுள்ளார்கள் என்றால் நான் மருத்துவரை விசாரிக்கவில்லை. மருத்துவரை டி.எஸ்.பி திரு.வானுமாமலை என்பவர் தான் விசாரித்துள்ளார். நான் மருத்துவமனை சென்று காயம்பட்ட சாட்சிகளை விசாரித்தபோது மருத்துவரை பார்த்து விசாரிக்க முயற்சி செய்யவில்லை. அ.சா.1 கொடுத்த புகாரை நான் படித்து பார்த்தேன். அந்த புகாரை அனுசரித்து தான் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

புகார் வாக்குமூலத்தில், அ.சா.1 15.02.2013 அன்று இரவு 09.30 மணிக்கு தனது சொந்த வேலையாக கடையநல்லூர் சென்று விட்டு வரும்போது சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 15.02.2013 நேர அளவு 21.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ஐ நான் விசாரணை செய்தபோது, அவர் சம்பவம் இரவு 08.30 மணிக்கு நடந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

அ.சா.1 சம்பவம் நடைபெற்ற பின்பு முதலில் காவல்நிலையம் வந்தாரா? என்றால் வந்தார். பின்பு புகார் வாக்குமூலம் கொடுத்தார். அ.சா.1–டம் மருத்துவ நமூனா கொடுத்து தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு

அனுப்பப்பட்டாரா? என்றால் இது குறித்து வழக்கு கோப்பில் துலங்கவில்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு மருத்துவ சிகிச்சைக்கு மருத்துவ நமூனா மூலம் தான் அனுப்ப வேண்டும் என்றால் கட்டாயமில்லை. போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் எந்த பிரிவின் கீழ் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு ஞாபகமில்லை. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் இறுதிஅறிக்கை எனது வழக்கு கோப்பில் தான் உள்ளது என்றால் சரிதான்.

என்னுடைய விசாரணையில் சம்பவம் எப்போது, எத்தனை மணிக்கு நடந்தது என்று தெரிய வந்தது என்றால் 15.02.2013 இரவு 09.20 மணிக்கு நடந்தது என்று தெரிய வந்தது. சாட்சிகள் என்னுடைய விசாரணையில் 15.02.2013, இரவு 08.30 மணிக்கு நடந்ததாக கூறியுள்ளார்கள். 09.20 மணிக்கு நடந்ததாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் 09.20 மணிக்கு நடந்தது என்று சொல்லியுள்ளேன். (சாட்சி மீண்டும் புகார் வாக்குமூலத்தை படித்து பார்த்து விட்டு அதில் இரவு 09.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறிகிறார்.). நேரத்தில் ஏற்பட்ட வேறுபாட்டை குறித்து முதல்தகவல்அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசாரித்தேனா? என்றால் இல்லை.

குற்ற எண்.25/2013 வழக்கில் 1வது எதிரி, அ.சா.1 மற்றும் அவரது வகையாட்களால் தாக்கப்பட்டு கொடுங்காயம் ஏற்பட்டதாக எனது விசாரணையில் துலங்கும் என்றால் இல்லை. என்னுடைய விசாரணையில் அவர்களுக்கு காயம் ஏற்பட்டதாக துலங்கியது. 2வது எதிரிக்கும் காயம் ஏற்பட்டதாக என்னுடைய விசாரணையில் துலங்கும். 1, 2 வது எதிரிகளின் காயச்சான்று மற்றும் விபத்து பதிவேட்டை இந்த

வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. அ.சா.1 மற்றும் அவரது வகையாட்கள் மீது 1வது எதிரி கொடுத்திருக்கும் புகார், மற்றும் அந்த வழக்கில் உள்ள அத்தாட்சி, மாதிரி வரைபடம் ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை .

குற்ற எண்.25/2013 என்ற வழக்கின் முதல்தகவல்அறிக்கையானது, 16.02.2013 அன்று தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல்தகவல்அறிக்கையானது, 18.02.2013 அன்று தான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் அந்த தேதி தான் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கின் முதல்தகவல்அறிக்கை காவல்நிலையத்திலிருந்து எப்போது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்று முதல்தகவல் அறிக்கையின் 15வது காலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

நான் போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டர் படி விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இரண்டு வழக்குகளிலும் முதல் புலன் விசாரணை அதிகாரி நான் தான். அதன் பின்பு இரு வழக்குகளையும் டி.எஸ்.பி விசாரித்துள்ளார் என்றால் சரிதான். காவல்கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில் தான் டி.எஸ்.பி இந்த இரு வழக்குகளையும் விசாரித்தார் என்றால் சரிதான். டி.எஸ்.பி யின் விசாரணைக்கு இந்த இருவழக்குகள் ஏன் அனுப்பப்பட்டது என்ற விபரம் காவல்கண்காணிப்பாளருக்கு மட்டுமே தெரியும். 1வது எதிரி, என் மீது ஒருதலைபட்சமாக விசாரணை செய்கிறேன் என்று புகார் கொடுத்து, அதன் பின்னர் தான் இந்த விசாரணை டி.எஸ்.பி விசாரணைக்கு மாற்றப்பட்டது என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகிலுள்ள கோட்டைச்சாமி, மணித்தேவர் ஆகிய இருவரையும் நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றாலும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்ற காரணத்தில் தான் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1 அவருடைய புகாரில், 15.02.2013 அன்று அ.சா.1 கடையநல்லூரிலிருந்து கிளம்பி குமந்தாபுரம் அகதிகள் முகாம் அருகே வந்தபோது, தனது ஊரைச் சேர்ந்த பெரியசாமி என்ற நபர் நின்று கொண்டிருந்ததாகவும், அங்கிருந்து பெரியசாமியும், தானும் தனித்தனி பைக்கில் ஊருக்கு சென்று கொண்டிருந்ததாகவும், பெரியசாமி அவரது தோப்பிற்கு அருகே வந்தபோது பைக்கை நிறுத்தி விட்டு சிறுநீர் கழிக்க சென்றதாகவும், பின்னர் மீண்டும் கிளம்பி சென்றதாகவும், அப்போது மருதையாபாண்டியன் தோப்பிலிருந்து எதிரே ஒரு கார் வந்தது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும், அந்த கார் தங்களை தாண்டி கடையநல்லூர் சென்று விட்டது, அப்போது இரவு 08.30 மணி இருக்கும் என புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எங்கள் ஊரை ஒட்டியுள்ள பிள்ளையார் கோவில் பக்கம் போனபோது, எனக்கு போன் வந்தது, நான் நின்று பேசிக்கொண்டிருந்தேன். கடையநல்லூர் நோக்கி சென்ற கார் மீண்டும் எனக்கு பின்னால் நின்றது, நான் நிறுத்தி வைத்திருந்த பைக்கிற்கு முன்னால் காரை மறித்து நிறுத்தினார்கள் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் கடையநல்லூர் என்று குறிப்பிடவில்லை. 1ம் எதிரி தன்னை பார்த்து, தேவடியா நான் சொன்னதை கேட்கவில்லை, நான் என்னுடைய வாழ்க்கையில் எத்தனை

ரவுடிகளை பார்த்துள்ளேன் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் தேவடியா மவனே என்று குறிப்பிட்டுள்ளார், நான் எத்தனை ரவடியை பார்த்துள்ளேன் என்று குறிப்பிடவில்லை.

அ.சா.1 தான் ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேன் என்றும், அதன் மூலம் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வேன் என்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரி கம்பியால் தனது தோள்பட்டையில் அடித்ததாக அ.சா.1 தன்னுடைய புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதுகின் வலதுபுறம் அடித்ததாக கூறியுள்ளார். எதிரிகள் நிலத்து பிரச்சனைக்கு நீதிமன்றம் சென்றுள்ளதால், உன்னை வெட்டி விட்டால் பிரச்சனை நீங்கி விடும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அவரது புகார் மனுவில் சுப்பையாபாண்டியனை மருதையாபாண்டியன் வலது காலில் வெட்டினார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

திருமலைக்குமாரை கடப்பாறையால் ராஜேந்திரன் கையில் அடித்தார் என்றுப புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தன்னை தன் மாமாவும், தம்பியும் சொக்கம்பட்டி காவல்நிலையத்திற்கு கூட்டி போனார்கள் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.2 சுப்பையாபாண்டியன் என்னுடைய விசாரணையில், 1, 2 எதிரிகள் அ.சா.1 ஐ அரிவாளால் அடித்ததாக துலங்கவில்லை என்றால் சரிதான். அ.சா.3 எனது விசாரணையில், எதிரிகளிடம் தானும், அ.சா.2 ம் இடப்பிரச்சனை சம்பந்தமாக கோர்ட்டில் வழக்கு போடப்பட்டுள்ளது, அங்கு போய் பார்த்து கொள்ள வேண்டியது தானே, என்று சொன்னதாக துலங்காது என்றால் சரிதான்.

அ.சா.3 எனது விசாரணையில், அ.சா.2 க்கு வலதுகாலில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாக கூறியதாக வழக்குகோப்பில் துலங்காது என்றால் சரிதான். 1 வது சாட்சி இசக்கிபாண்டியன் கள்ளத்தனமாக மணல் எடுத்து வியாபாரம் செய்வது சம்பந்தமாக 1 வது எதிரி, உயர் அதிகாரிகளுக்கு மனு செய்ததினால் இசக்கிபாண்டியனுக்கு 1 வது எதிரிக்கு விரோதம் இருந்து வந்தது என்றால் இது குறித்து வழக்கு கோப்பில் துலங்காது. கோட்டாட்சியர் தலைவரால், 1 வது சாட்சி திருட்டு மணல் அள்ளியது சம்பந்தமாக பல்வேறு தேதிகளில் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அபராதத்தொகையையும் செலுத்தியுள்ளார் என்றால் இது குறித்து வழக்கு கோப்பில் துலங்காது.

எனக்கும், இசக்கிபாண்டியனுக்கும் உள்ள நட்பை பயன்படுத்தி இசக்கிபாண்டியனை காப்பாற்ற வேண்டி அவர்களின் தூண்டுதலின் பேரில் பிற்பாடாக இந்த வழக்கின் முதல்தகவல்அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், சொன்ன நாள், சொன்ன விதத்தில் இந்த வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், இசக்கிபாண்டியனின் வகையறாக்கள் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகள் மீது பொய்யான புகாரை பெற்று முதல்தகவல்அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றாலும், அதன் அடிப்படையில் ஒருதலைபட்சமாக விசாரணை செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளை நான் கைது செய்யவில்லை என்றாலும், சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:47:52 +0530